சுருக்கம்

நகராட்சி நிர்வாகம் – விருதுநகர் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சித்த மருத்துவமனையை மூடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.7) துறை**

**அரசாணை (நிலை) எண்.573** | **நாள்: 18.11.2010**

**படிக்கப்பட்டது:-**

1. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண். 91191/ 97/எச்3 நாள் 11.10.99 மற்றும் 30.10.2004.
2. இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறை சிறப்பு ஆணையரின் ந.க.எண் 9103/ நி2/ 2/2005. நாள் : 23/06/2005

*****

ஆணை:-

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் விருதுநகர் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சித்த மருத்துவமனை 1935–ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது என்றும் இம்மருத்துவமனைக்கு வந்து செல்லும் நோயாளிகளின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது என்றும், எனினும் மருத்துவமனைப் பணியாளர்கள் செலவினம் ஆண்டுக்கு ஆண்டு கூடிக் கொண்டே செல்கிறது என்றும், இம்மருத்துவமனைக்கு அரசு மானியம் எதுவும் பெறப்படவில்லை என்றும் விருதுநகரில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் சித்த மருத்துவமனை இயங்கி வருகிறது என்றும், எனவே, விருதுநகர் நகராட்சியின் கீழ் இயங்கி வரும் சித்த மருத்துவமனையை மூடிவிட அரசின் அனுமதியை வேண்டியிருந்தார்.

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலும் தெரிவிக்கையில், விருதுநகர் நகராட்சியில் தற்போது 3 அலுவலர்கள் பணிபுரிந்து வருவதாகவும், இவர்களில் திருமதி.சி.உஷாராணி, மருத்துவ அலுவலர் திருச்சி மாநகராட்சிக்கு மாறுதல் கோரியுள்ளார் என்றும் ஆண் மருத்துவ உதவியாளர், திரு.என்.விஜயகுமார் மற்றும் துப்புரவுப் பணியாளர், திருமதி அனந்தம்மாள் ஆகிய இருவரையும் காலியாக உள்ள வேறு பணியிடத்தில் பணியிடம் வழங்க வேண்டும் என்று தெரிவித்து விருதுநகர் நகராட்சியின் சித்த மருத்துவமனையை மூடிவிட உத்தரவு பிறப்பிக்க அரசினைக் கேட்டுக் கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் (தீர்மானம் எண்.126, நாள் 28.5.2004) என்று தெரிவித்துள்ளார்.

3. மேலும், இந்நிலையில், விருதுநகர் நகராட்சியில் உள்ள சித்த மருத்துவ மனையில் பணிபுரியும் இரண்டு பணியாளர்களை (மருத்துவ உதவியாளர் மற்றும் துப்புரவு பணியாளரை) விருதுநகர் நகராட்சியில் மேற்படி பணியிடங்களுக்கு ஒத்த ஊதிய

விகிதத்தில் காலியாக உள்ள பிரிவு எண்.1-ல் துப்புரவு பணியாளர் மற்றும் பிரிவு 2-ல் துப்புரவுப் பணியாளராகவும் 22.04.2008 முற்பகல் முதல் பணிமாறுதல் செய்து விருதுநகர் நகராட்சி ஆணையரின் செயல்முறைகளில் உத்திரவிடப்பட்டுள்ளது என்று தெரிவித்து, சித்த மருத்துவமனையை முடிவிடுவது குறித்து தக்க ஆணை பிறப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கோரியுள்ளார்.

4. இந்நேர்வு அரசால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. பரிசீலனைக்குப் பின்னர் விருதுநகர் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் சித்த மருத்துவமனையில் பணியாற்றும் பணியாளர்களை தற்போதுள்ள பணியிடத்தில் மறு ஒதுக்கீடு அடிப்படையில் (Redeployment Basis) பணியமர்த்தப்பட வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, அந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் சித்த மருத்துவமனையினை மூடுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை, நிதித்துறையின், 13.08.2010 நாளிட்ட, அ.சா.எண்.45370/ நிதி(ந.நி.ம.கு.வ)த்துறை/2010 ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அசோக்வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
நகராட்சி ஆணையர், விருதுநகர் நகராட்சி, விருதுநகர்.
நகல் -
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
நிதி(ந.நி.(ம).கு.வ)த்துறை, சென்னை – 600 009.
முதலமைச்சர் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம்
மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந 2) துறை, சென்னை – 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.